**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 120/2023**

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02–ம் நாள் வியாழக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 02.04.2026 | | |
| பெயர்: | பாலகுரு<br>(DW1– Cross ) | தகப்பனார் பெயர்: | காசி |
| கிராமம்: | வேட்டங்குடி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாய கூலி | வயது : | 52/2026 |

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 02.04.2026</u>

**(ஆரம்பித்த நேரம்– 12.37)**

1. தாவா சொத்து வேட்டங்குடி கிராமம் வாடி நடுத்தெருவில் அமைந்துள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண்.83/13 என்றால் சரிதான். தாவா சொத்தில் கூரைவீடும், காலனி வீடும் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு வடக்கில் செல்வராஜின் கூரைவீடு, மனை உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு தெற்கில் ரோடு உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு கிழக்கில் ரோடு உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு மேற்கில் ராமு கூரைவீடும், மனையும் உள்ளது என்றால் சரிதான்.

2. தாவா சொத்து இதற்கு முன்பு ராஜேந்திரன் (ஏ) ராயருக்கு சொந்தமானது என்றால் சரிதான். ராயருக்கு நத்தம் நிலவரித்திட்டத்தில் பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தை ராயர் வாதிக்கு கடந்த 29.04.2013 ல் கிரயம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து வாதிக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளேன்.

3. அந்த எதிர்வழக்குரையில் தாவா சொத்து எனக்கு சொந்தமானது தான் என்று நான் கட்சி எடுத்துள்ளேனா என்றால் எடுத்துள்ளேன். தாவா சொத்து எனக்கு சொந்தமானது என்பதற்கு ஆதரவாக ஆவணங்கள் ஏதேனும் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தில் எனக்கு உரிமை இல்லாததால் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாவா சொத்திற்கு இடையூறு செய்ததால் தான் வாதி என் மீது வழக்கு தொடர்ந்துள்ளார் என்றால் இருக்கலாம்.

4. நான் எனது எதிர் வழக்குரையில் தாவா சொத்து எனது அனுபவத்தில் உள்ளது என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. அதேபோல் தாவா சொத்து வாதியிடம் உள்ளதை மறுத்து நான் கட்சி செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு வாதிக்கு உள்ள உரிமைமூலத்தை மறுத்து நான் கட்சி செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கும், எனது வீட்டிற்கும் இடையே சந்து இல்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

5. அவ்வாறு சந்து இருந்ததற்கான ஆவணங்கள் ஏதும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு வடக்கில் உள்ள செல்வராஜை வாதி தரப்பில் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர் தனது சாட்சியத்தில் சந்து இல்லை என சாட்சியம் அளித்திருக்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தில் உள்ள காலனி வீடு பழுதடைந்து உள்ளது என்றால் சரிதான்.

6. அதை இடிக்க வாதி முயற்சி செய்தபோது நான் தடுத்தேன் என்றால் சரியல்ல. அதனால் தான் என் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் வாதியும் கொடுத்தார், நானும் கொடுத்தேன். புகாரை விசாரித்த காவல் நிலையத்தார் புகாரின் தன்மை சிவில் கோர்ட்டிற்கு உள்ளது என்பதால் விசாரிக்காமல் திருப்பிவிட்டார்கள் என்றால் சரிதான். தாவா சொத்து எனக்கு சொந்தமானது என்றோ, எனது உரிமையிலும், அனுபவத்திலும் உள்ளது என்றோ

வழக்கு ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு எண் தெரியாது.

7. அந்த வழக்கு வாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான் வாதிக்கு எதிராக எந்த வழக்கும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 2 முதல் 4 பிரதிவாதிகள் எனது மகன்கள் என்றால் சரிதான். வாதி ஸ்ரீகாந்த் அவரது தாயாருக்கு ஒரே மகன் ஆவார். வாதி ஒரே மகன் என்பதால் நான் எனது மகன்களுடன் கூட்டு சேர்ந்து அவருக்கு எதிராக பிரச்சனை செய்கிறோம் என்றால் சரியல்ல.

8. தாவா சொத்தை வாதி அனுபவிப்பதை நான் இடையூறு செய்ததால் தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் எனக்கு எவ்வித உரிமையும், அனுபவமும் இல்லை என்பதால் வாதி கோரியவாறு தீர்ப்பாணை செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. வாதி தான் தாவா சொத்திற்கு உரிமையாளர் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 12.57)**